# "ஊற்றுப்புலம்" ஒரு தொல்லியல் நோக்கு

**லோஜிகா, இ., புஸ்பரட்ணம்,ப**
வரலாற்றுத்துறை (தொல்லியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
rasanayagamlogika@gmail.com

*ஒரு நாட்டின் வரலாற்றை அறிவதற்கு முக்கிய ஆதாரமாக பார்க்கப்படுவது தொல்லியல் சான்றுகளாகும். இவற்றில் கல்வெட்டுக்கள், மட்பாண்டங்கள், நாணயங்கள், கட்டிட அழிபாடுகள், மனித எச்சங்கள் என்பன சம்பவம் நடை பெற்ற காலப்பகுதியோடு நேரடியாக தொடர்பு கொண்டிருப்பதனால் உண்மைத் தன்மையான வரலாற்றை எழுதுவதற்கான உறுதியான சான்றாதாரமாகப் பார்க்கப்படுகின்றது. 125000 ஆண்டுகளுக்கு முன்னர் மனித பரிணாமம் நிகழ்ந்ததிற்கான சான்றுகள் இரணைமடு பகுதிகளில் கிடைக்கப் பெற்றதன் மூலம் வன்னி நிலப் பரப்பு பல ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீட்சியுடைய தொன்மையான வரலாற்றைக் கொண்டு விளங்கியமை உறுதிப்படுத்தப்பட்டது. இலங்கையின் வரண்ட பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு உயிர் நாடியாக அமைவது குளத்து நீர்பாசனமாகும். இவை பண்பாட்டுநாகரிக உருவாக்கத்திற்கு வித்திட்டன. கலகலப்பாற்றினை அடிப்படையாகக் கொண்டு அமைந்த புதுமுறிப்புக்குளமானது ஊற்றுப்புல பிரதேசத்தின் நாகரிக உருவாக்கத்திற்கு வித்திட்டது. தமிழர்களின் வரலாற்று தொன்மையை புலப்படுத்தும் பல இடங்கள் இன்றுவரை ஆய்வுகளிற்கு உட்படுத்தப்படாமல் உள்ளன. அவ்வாறான இடங்களில் ஒன்று தான் கிளிநொச்சியில் உள்ள ஊற்றுப்புலப் பிரதேசமாகும். ஐந்தடி அல்லது ஆறடி ஆழம் கொண்ட கிணற்றில் நீர் ஊற்றெடுத்து வழிந்தோடிக் கொண்டிருப்பதனால் ஊற்றுப்புலம் எனப்பட்டது. இங்குள்ள மலைகளின் உச்சியில் செங்கட்டிகள் மற்றும் கருங்கற்கள் கொண்டு அமைக்கப்பட்ட கட்டிட அழிபாடுகள், மட்பாண்ட சிதைவுகள், தூண்கள், இறந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட கல்வட்ட ஈமைச் சின்னங்கள், கைவிரல் படிவுள்ள ஓட்டுத்துண்டங்கள், நாக வழிபாட்டு ஆலயங்கள் என தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையை தமிழர்களின் பண்பாட்டு பாரம்பரியத்தை, தமிழர்களின் மதங்களையும் வெளிச்சமிட்டு காட்டும் பிராந்தியமாக இப்பிராந்தியம் விளங்குகிறது. பெருங்கற்கால பண்பாட்டு வழிவந்த தமிழர்கள் பௌத்த மதத்தை ஆதரித்ததை புலப்படுத்தும் அதேவேளை இந்து மதத்திற்கு முன்னோடியாக இருந்த குறியீடுகளும் தமிழர் இனக்குழுவாக வாழ்ந்ததையும் இயற்கையான நீரூற்றுக்கள் கொண்டிருந்ததன் பின்னணியில் பொருளாதார நடவடிக்கைக்கு சாதகமான காரணிகள் தொடங்கி விடப்பட்டதையும் இதன் பின்னனியிலே உயர்ந்த சமூகம் வாழ்ந்ததை இங்கு கிடைத்த தொல்லியல் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. இப்பகுதியானது தொல்லியல் மையமாக அடையாளப்படுத்தப்பட்ட போதும் விரிவான ஆய்வுகள் மேற் கொள்ளப் படாமையினால் தொல்லியல் சின்னங்கள் அழிவடைந்து வருகின்றன. இதனை தடுக்கும் முகமாக இத் தொல்லியல் மையம் தொடர்பாகவும் தொல்லியல் சின்னங்கள் தொடர் பாகவும் விழிப்புணர்வூட்டி தொல்லியல் மையத்தையும் தொல்லியல் சின்னங்களையும் வெளியுலகிற்கு கொண்டுவந்து ஆவணப்படுத்துவதாக இவ் ஆய்வு அமைகிறது. இவ்*